## கிடாம்பி ரங்கராச அப்புள்ளார்
## வாழி திருநாமம்

இராமநுசப்புள்ளான் இணை அடிகள் வாழியே
ஈனமிலாப் பங்குனி உரோகிணியான் வாழியே
இராமாநுசன் கருத்தை எடுத்துரைப்போன் வாழியே
எந்தாதை அப்புளார் ஏத்த நின்றான் வாழியே
பராங்குசன் தன் மறைப் பொருளைப் பயில்விப்பான் வாழியே
பரம்பொருளைப் பணிவிக்கும் பனுவல் செய்தான் வாழியே
அராநிகர்க்கும் குமதிகளை அழிக்குமவன் வாழியே
அரங்கராசப்புள்ளான் அம்புயத் தாள் வாழியே

---